**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**STC. No. 01/2022 PW . 1**

**பெயர் :** **பாண்டி** **தந்தை/கணவர் பெயர்: முருகேசன்**

**ஊர்** : **தாலுகா:**

**வயது** : **தொழில்:**

**ஜாதி** : **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2025

---

**(எதிரி ஆஜர்).**

**07.08.2025 முதல் விசாரணை:**

1. நான் தற்போது குருத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். ஓட்டுநர் தொழில்செய்கிறேன். 22.11.2019ம் தேதியன்று புதுக்கோட்டையிலிருந்து மதுரைக்கு தாமரைப்பூ எடுத்துக்கொண்டு நான், மாமா காளிதாஸ், தம்பி மளுவேந்திரன், பழனிக்குமார் ஆகிய நால்வரும் பொலிரோ காரில் டிஎன் 58 எஸ் 6123 சென்றோம். திருப்பத்தூர் எஸ்எஸ்கோட்டை பெண்ட் கிருஷ்ணாபுரத்தில் வலதுபுறம் சென்றுகொண்டிருந்தபோது மதுரையிலிருந்து வந்த பிஆர்சி பேருந்து எங்கள் வாகனத்தின் வலதுபுறம் மோதிவிட்டது. மேற்படி பேருந்து டாடா ஏஎஸ் வாகனத்தை முந்தி வந்து திரும்பிய என் வாகனத்தின் மீது மோதியதால் விபத்து ஏற்பட்டது. பிஆர்சி பேருந்தை ஓட்டி வந்தவர் ஆஜர் எதிரி தான். எனக்கு தலை, மூக்கிலும், காளிதாஸ்க்கு முகத்திலும், தோள்பட்டையிலும், மளுவேந்திரனுக்கு முகத்திலும், முதுகிலும் காயம் ஏற்பட்டது. பழனிக்குமாருக்கு கழுத்தில் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட எங்களை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நாங்கள் சிகிச்சையில் இருந்தபோது எஸ்எஸ்கோட்டை போலீசார் விசாரித்து புகார்மனு பெற்றுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும்புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

2. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும்இடம் தென்வடலாக வந்து கிழக்கு திரும்பும் வளைவான இடம் என்றால் சரிதான். வளைவு உள்ளதால் எதிரேவரும் வாகனம் தெரியாது என்றால் சரிதான். எனது பொலிரோ கார் பேருந்தின் வலதுபுறம் இடித்து 10 அடி துாரத்தில் நின்றது என்றால்சரிதான். பேருந்து நின்ற இடத்தில் தான் சம்பவம் நடந்தது என்றால் சரியல்ல. பேருந்தின் ஓட்டுநர் வண்டியை நேராக நிறுத்திவிட்டு ஓடிவிட்டார். இரண்டு வாகனங்களும் நேருக்கு நேராக மோதவில்லை. நேருக்கு நேராக மோதியிருந்தால் பஸ்க்கு முன்பக்கம் கார் நின்றிருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். போலீசார் என்னை திருப்பத்தூர் மருத்துவமனை மற்றும் மறுநாள் காவல்நிலையத்திலும் வைத்து விசாரித்தார்கள். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் போது சொல்லிக்கொள்ளாமல் சென்றுவிட்டோம் என்றால் தனியார்

மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொள்வதாக சொல்லிவிட்டு சென்றேன். நான் சொல்லிக்கொள்ளாமல் மருத்துவமனையை விட்டு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு பின்பு பேருந்தானது இடது புறம் நின்றது என்றால் சரிதான். எதிரி இடது புறம் வந்தார் என்றாலும் நான் அதிவேகமாக ஓட்டி வந்து பேருந்தின் வலது புறத்தில் மோதி, மோதிய பின்பும் 10 அடி துாரத்தில் நான் வாகனத்தை நிறுத்தினேன் என்றால்சரியல்ல. எதிரியின் கவனக்குறைவால் விபத்து நடைபெறவில்லை என்றாலும் எதிரி மீது பொய்யா புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் எதிரிக்கும் இந்த விபத்திற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல. வாகனத்தில் பயணம் செய்த நபர்களுக்கு காயம் ஏற்பட்டதால் தான்இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**

**SINGAMPUNARI**

**STC. No. 01/2022 PW . 2**

**பெயர் : காளிதாஸ்** **தந்தை/கணவர் பெயர்: செல்வராஜ்**

**ஊர் :** **தாலுகா:**

**வயது :** **தொழில்:**

**ஜாதி :** **சமயம்:**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2025

---

**(எதிரி ஆஜர்).**

**07.08.2025 முதல் விசாரணை:**

1. நான் தற்போது குருத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். தாமரை பூ வியாபாரம் செய்கிறேன். 22.11.2019ம் தேதியன்று புதுக்கோட்டையிலிருந்து மதுரைக்கு தாமரைப்பூ எடுத்துக்கொண்டு நான், அ.சா.1, தம்பி மளுவேந்திரன், பழனிக்குமார் ஆகிய நால்வரும் பொலிரோ காரில் டிஎன் 58 எஸ் 6123 சென்றோம். கிருஷ்ணாபுரம் அருகே விபத்து ஏற்பட்டது. பேருந்தானது மதுரையிலிருந்து எதிர் திசையில் வந்து காரின் வலதுபுறம் மோதிவிட்டது. எங்களுக்கு முன்னால் டாடா ஏஎஸ் வாகனம் வந்துகொண்டிருந்தது. அதனை முந்தி பேருந்து ஏறி வரும் போது எங்கள் வாகனத்தின் மீது மோதியதால் விபத்து ஏற்பட்டது. எனக்கு விபத்தில் காயம் ஏற்பட்டதால் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. செல்வம் என்று தெரிந்து கொண்டேன். எனக்கு தலையிலும், தாடையிலும், வலதுகாலிலும் அடி ஏற்பட்டது. பாண்டிக்கு தலையில் அடி, மளுவேந்திரனுக்கு முகத்திலும், முதுகிலும் காயம் ஏற்பட்டது. பழனிக்குமாருக்கு தலையிலும், நெஞ்சிலும் ஊமைக்காயம் ஏற்பட்டது. காயம்பட்ட எங்களை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின்னர் மதுரை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்து சிகிச்சை பெற்றோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

2. நான் பொலிரோ காரில் பின்புறம் உட்கார்ந்திருந்தேன். டமார் என்று சத்தம் கேட்டபோது தான் பார்த்தேன். சம்பவம் நடந்த பிறகு பொலிரோ கார் 10 அடி தூரம் தள்ளி சென்றுநின்றதா என்றால் எனக்கு சுயநினைவு இல்லை. எனக்கு மருத்துவமனையில் 1 வாரம் கழித்து தான் சுயநினைவு வந்தது. எதிரியின் கவனக்குறைவால் விபத்து நடைபெறவில்லை என்றாலும் எதிரி மீது பொய்யாக அ.சா.1 புகார் கொடுத்தன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எதிரிக்கும் இந்த விபத்திற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல. வாகனத்தில் பயணம் செய்த நபர்களுக்கு காயம் ஏற்பட்டதால் தான்இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1ன் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால்சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**STC. No. 01/2022 PW . 3**

| | |
|---|---|
| **பெயர் : மஞுவேந்திரன்** | **தந்தை/கணவர் பெயர்: அழகர்** |
| **ஊர் :** | **தாலுகா:** |
| **வயது :** | **தொழில்:** |
| **ஜாதி :** | **சமயம்:** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2025

---

**(எதிரி ஆஜர்).**

**07.08.2025 முதல் விசாரணை:**

1. நான் தற்போது குருத்துார் கிராமத்தில் வசிக்கிறேன். பூமார்க்கெட்டில் வியாபாரம் செய்கிறேன். 22.11.2019ம் தேதியன்று காலை 6 மணியளவில் புதுக்கோட்டையிலிருந்து மதுரைக்கு தாமரைப்பூ எடுத்துக்கொண்டு அ.சா.1, 2, நான், பழனிக்குமார் ஆகிய நால்வரும் பொலிரோ காரில் டிஎன் 58 எஸ் 6123 சென்றோம். கிருஷ்ணாபுரம் திருப்பத்தில் டாடாஏஸ் வாகனம் ஏறுவதற்குள் பேருந்து ஏறி வந்ததால் பேருந்து வேகமாக வந்து எங்கள் காரின் மீது அடித்து மோதிவிட்டது. பேருந்தை ஓட்டி வந்தவர் ஆஜர் எதிரி தான். அ.சா.2க்கு தலையிலும், தாடையிலும், வலதுகாலிலும் அடி ஏற்பட்டது. அ.சா.1 தலையில் அடி, எனக்கு உதட்டிலும், இடுப்பிலும் காயம் ஏற்பட்டது. பழனிக்குமாருக்கு நெஞ்சில் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட எங்களை திருப்பத்துார் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின்னர் மதுரை தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்து சிகிச்சை பெற்றோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

2. நான் டிரைவருக்கு பின்புறத்தில் உள்ள இருக்கையில் அமர்ந்திருந்தேன். டமார் என்று சத்தம்கேட்டு பார்த்தேன். எதிரியின் கவனக்குறைவால் விபத்து நடைபெறவில்லை என்றாலும் எதிரி மீது பொய்யாக அ.சா.1 புகார் கொடுத்தன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எதிரிக்கும் இந்த விபத்திற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல. வாகனத்தில் பயணம் செய்த நபர்களுக்கு காயம் ஏற்பட்டதால் தான்இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1ன் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால்சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**STC. No. 01/2022 PW . 4**

| | |
|---|---|
| **பெயர் : பழனிக்குமார்** | **தந்தை/கணவர் பெயர்: மகாராஜா** |
| **ஊர் :** | **தாலுகா:** |
| **வயது :** | **தொழில்:** |
| **ஜாதி :** | **சமயம்:** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2025

---

**(எதிரி ஆஜர்).**

**<u>07.08.2025 முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது குருத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். தாமரைபூ வியாபாரம் செய்கிறேன். 22.11.2019ம் தேதியன்று காலை 6.45 மணியளவில் புதுக்கோட்டையிலிருந்து மதுரைக்கு தாமரைப்பூ எடுத்துக்கொண்டு அ.சா.1, 2, 3, நான் ஆகிய நால்வரும் பொலிரோ காரில் டிஎன் 58 எஸ் 6123 சென்றோம். கிருஷ்ணாபுரத்தில் விபத்து ஏற்பட்டது. ஆஜர்எதிரி மதுரை-மயிலாடுதுரை அரசு பேருந்தினை தனக்கு முன்னாக வந்த குட்டியானையை முந்த ஏறி வந்து எங்கள் காரின் மீது அடித்து மோதி விபத்து ஏற்பட்டது. பேருந்தை ஓட்டி வந்தவர் ஆஜர் எதிரி தான். அ.சா.2க்கு தலையிலும், தாடையிலும், நெஞ்சில்அடி ஏற்பட்டது. அ.சா.1 புருவத்திலும் அடி, .அ.சா.3க்கு நாடிலும், இடுப்பிலும் காயம் ஏற்பட்டது. எனக்கு கழுத்தில், நெஞ்சில், இடுப்பில் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட எங்களை 108 ஆம்புலன்சு மூலம் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின்னர் நாங்கள் சிகிச்சை தாமதித்ததால் மதுரை தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்து சிகிச்சை பெற்றோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

2. சம்பவம் நடந்த இடத்திலே எதிரி ஓட்டி வந்த பேருந்து நின்றது என்றால் சரிதான். நான் டிரைவருக்கு பக்கத்தில் உள்ள முன்புற இருக்கையில் அமர்ந்திருந்தேன். டமார் என்று சத்தம்கேட்டு பார்த்தேன். எதிரியின் கவனக்குறைவால் விபத்து நடைபெறவில்லை என்றாலும் எதிரி மீது பொய்யாக அ.சா.1 புகார் கொடுத்தன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எதிரிக்கும் இந்த விபத்திற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல. வாகனத்தில் பயணம் செய்த நபர்களுக்கு காயம் ஏற்பட்டதால் தான்இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1ன் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால்சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.